# சல்லிக்காடு

குறு இதிகாசம்



இரா. ஜெகதீஸ்
(எழுதப்பட்ட ஆண்டு 1998 )

இது கதையல்ல நிஜம்.
நிஜமான கதை. யாழ் மாவட்டத்தில் இருந்து இல்லாமல் போன ஒரு சிறிய கிராமத்தின் உண்மை கதை.

உண்மையாக நடந்த கதைகளை “இதிகாசம்” என்று அழைப்பதுண்டு.
அப்படிப் பார்த்தால் இது ஒரு சல்லிக்காட்டு இதிகாசமே...!

புலம் பெயர்ந்து பல வருடங்கள் கடந்த நிலையில் ஒரு நாள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்த நான் அங்குள்ள வைத்தியசாலை யன்னல் ஓரத்தில் இருந்த ஒற்றை மரத்தையும் அங்கு வந்து அமரும் சின்ன சின்ன பறவைகளையும் அவைகள் செய்கின்ற சேட்டைகளை நுட்பமாக நீண்ட நேரமாக அவதானித்தபடியே இருந்தேன். திடீர்ரென அப்போது இந்த கதை மனதில் தோன்றியது.
பட பட வென **15-20** நிமிடத்தில் இந்த கதையை ஒரே தடவையில் எழுதி முடித்து விட்டு.
மீண்டும் படித்துப் பார்த்த போது... எனக்கு பெரிய வியப்பாக இருந்தது. இந்த மரமே இந்த கதையைகூறியது போலவும் ... இல்லை யாரோ இந்த கதையை எழுதி ஜன்னல்வழியாக எறிந்து விட்டது போல உணர்வே ஏற்பட்டது. (ஆண்டு **1998**)

அப்படி ஒரு வியப்பான அனுபவமே இந்த சிறுகுறு சல்லிக்காட்டு இதிகாசம்.
(கதையில் வரும்உண்மையான ஊர் பெயர் இந்த கதையில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை.)

வாருங்கள்..இனி சல்லிக்காட்டு கிராமத்தை நோக்கி பயணிப்போம்....!





சல்லிக்காடு

அது ஒருஅழகான கிராமம் என்று சொல்லமுடியாது.
வரண்ட வெட்டவெளிகளிலே..
குட்டிக்குட்டிக் குடிசைகளைக்கொண்ட
ஒரு பெட்டிக் கிராமம் அது.
மிகப் பெரிய தொழிற்காலைக்கு அருகிலே இருக்கும்
அந்த கிராமத்திற்கும் கடலுக்கும் தூரம்
அதிகமில்லை.

காலையில் சூரியன் எழும் நேரம்
இந்தக் கிராமத்து மக்கள் கடுமையாக உழைத்து
காலைத்தேனீர் அருந்த உட்காரும் நேரமும் கிட்டத்தட்ட
சரியாக இருக்கும்.
அத்தனை கடும் உழைப்பாளிகள் அவர்கள்.

சல்லி என்கின்ற ஒருவகை சுண்ணாம்பு
கற்பாறையை நிலத்திற்கு அடியில் இருந்து தோண்டி
எடுத்து மண்ணை பிரித்தரித்து வித்து பிழைப்பு
நடத்துகிறார்கள்

இவர்களைப்பொறுத்தவரை இந்தகிராமத்தின்
மூலதனம் அது. வாழ்வின் வருமானமும்,
வாழ்வாதாரமும் அது... ஏன் அந்த கிராமத்தை
குழிதோண்டி புதைக்கும் ஆபத்தும் அது தான்.

சின்னஞ்சிறிய பிஞ்சுக்குழந்தைகளைக் கூட
கரடுமுரடான அந்தகட்டாந்தரையினிலே கொழுத்தும்
வெய்யிலிலே..
அம்மணமாக அமர்த்திவைத்து விட்டு வியர்வையில்
குளிக்கிறது அந்த கிராமம்.
காரணம் = வறுமை.. வறுமை.. வறுமை...!!!





புகை எழும்பும் புழதிமண்ணில் உருமாறி
போனது இவர்கள் மட்டுமல்ல..
அவர்களின் பிள்ளைகளும் தான்.

இவர்களுக்கு வாழ்வில் வறுமை தந்த காயங்கள்
ஏராளம் ..!
காலில்,முழங்காலில்,கையில்
கைவிரல்களில்,கன்னத்தில்,தலையில், என்று
வறுமை தந்த காயங்கள் ஏராளம்.
உப்பு வியர்வையும்,புகையெழுப்பும்
புழதிமண்ணும் தான் இவர்கள் புண்ணாற்றும்
மருந்து.
காகம் கொத்திய பப்பாளிப்பழம் போல
செக்கச்சிவந்துபோயிருக்கிறது இவர்
காயங்கள்.
வருமானதிதிற்காக இவர்கள் கொத்தி
குழிதோண்டிய கிராமத்து
மண்ணைப்போல ...!
காயங்களையும் இவர்களின்
எதிர்காலத்தைப்போலவே அலட்சியம்
செய்கிறார்கள்.
அவர்களின் அறியாமையை புரிந்து
கொண்டதனாலேயோ.. என்னவோ
இலையான்களும் இவர்களின் காயங்களின்
மீதமர்ந்து ஜீவனம் செய்கிறது..!
ஆரவாரம் செய்யும் அந்த இலையான்களின்
சத்தத்தையும் மீறும் ஒரு இரைச்சல் சத்தம்
திடீரென எல்லோர் முகத்திலும் ஓர் உற்சாகம்
ஒருவித மகிழ்ச்சி பரவுகிறது.





அவசர அவசரமாக பள்ளத்திலிருந்து ஊர் மெல்ல வெளியேறுகிறது.
சின்ன மலைபோல குவிந்திருக்கும் அவர்களின் அன்றைய உழைப்பை எண்ணி இடுப்பில் கைவைத்து எல்லோரும் பெருமிதம் கொள்கிறார்கள்.
வெள்ளையுடுத்து இவர்கள் உழைப்பை அள்ளவரும் அந்த வாகன மனிதர்களை, தங்கள் கள்ளமில்லா வெள்ளைச் சிரிப்போடு, கைகாட்டி வரவேற்கிறார்கள் இந்த கிராமத்து ஆண்கள்.
இன்றைய உலைக்கு ஏதோ ஒருவழி கிடைத்துவிட்ட மகிழ்ச்சி எல்லோர் முகத்திலும் தெரிகிகிறது.
நீண்டதொருபெருமூச்சோடு தத் தம் பிள்ளைகளை இடுப்பில்தூக்கிவைத்தபடி, உழைத்து களைத்துப்போயிருக்கும் தம் கணவர்மார்களுக்கு, வேளைக்கு வீடுவாரும். என்பது போல ஜாடைகாட்டி விட்டு குடிசைக்கு போகிறார்கள் இந்த கிராமத்துப்பெண்கள்.

உறங்க செல்லும் முன் கண்ணதாசன் பாடல் ஒன்று ஒலித்தது...
" தன் வியர்வையிலும், உழைப்பிலுனிலும் வாழ்வை கண்டு தொழில் புரிந்து உயிர்வளர்க்கும் ஏழை, அவன் இதழ் மலரும்சிரிப்பொலியை கேட்டேன். அந்த சிரிப்பினிலே... இறைவனை நான் பார்த்தேன்."




எப்போது உறங்கினேனோ எனக்கே தெரியாது.
காதுக்குள் யாரோ மைக் ரெஸ்ரிங் செய்வது
போலிருக்க கண்விழித்துக் கொண்டேன் அட..
எறும்பு எல்லா உயிர்களுக்கும் வாழ்வின்
தேடலுண்டுதானே அவரவர்
அறிவிற்கேற்றாற்போல. இயற்கையின்
படைப்பை
எண்ணி வியப்பதா ..! இல்லை .. குழம்புவதா..!
அப்பாடா ..
ஒரு வழியா எறும்பின் இந்த தொந்தரவு
ஒலிபரப்பு முடிவுக்கு வந்தது.

உறங்கும் முன் இறுதியாக வானிலை அறிக்கை
கேட்ட ஞபாபகம் வர .. சட்டென்று எழுந்து
வெளியே பார்த்தேன், ஆம் எம் வானிலை
அறிக்கையும் சிலவேளைகளில் சரியாகத்தான்
இருக்கிறது.
பெரிய காற்றோடு மழையொன்று வந்து
போன அடையாளம் தெரிகிறது.

பாவம் அந்த சல்லிக்கிராமத்து சனங்கள்..!

வானிலை அறிக்கை கேட்டா அந்தமக்கள்
வாழ்வை நடத்துவார்கள்.
மழையென்றால் அவர்களின் அகராதியில்
பட்டினி என்று பொருளாயிற்றே சட்டென்று
அவர்கள் ஞாபகம் வர அவசரஅவசரமாக அந்த
கிராமத்தை நோக்கி நடையைக்கட்டினேன்.






ஐயகோ ஒத்தை இரவில் அத்தனை
குடிசைகளையும் யார் வந்து கொள்ளையிட்டார்..!

இந்த ஊர் மக்களெல்லாம் எங்கே போனார்கள்..?

அந்த ஊரிலேயே உயரமான குடிசையொன்றின்
முகடு இறுதி மூச்சு விட்டுக்கொண்டிருந்தது.

வெள்ளம் அந்த பள்ளக் கிராமத்தை
முழுதாகவிழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருந்தது.

பாவம் அங்கே ஒரு ஆட்டுக்குட்டி பள்ளம் எது மேடு
எது என்று தெரியாமல் முழ்கி முழ்கி அவலக்குரல்
எழுப்பிக் கொண்டிருக்கிறது.
கண்ணுக்கு முன்னாலே ஒரு அத்திப்பட்டி
ஐயகோ..! என் செய்வேன்..!
கேட்டேனே அந்த கல்லு மனிதரிடம் அன்று..
கேட்டேனே..! அந்த கிராமத்து சனங்கள் தான்
ஏதோ விபரம் தெரியாமல் குழிதோன்றாங்கள்
என்டால் நீங்களாச்சும் இதை விட்டுவிடுங்கோ
அண்ணை சொல்லி முடிப்பதற்குள்
“ஐ போயா...! அவங்களே..! ஒன்டும்
அலட்டிக்கொள்ளேல இவரு வந்திட்டார்”
கல்லு மனிதர்களிடம் பேசி எந்தப் பயனும்
இல்லை. அடுத்த நாள் அந்த கிராமத்து
சனங்களிடமும் பேசிப்பார்த்தேன் “சோத்துக்கு
உன் வீட்டுக்கு வரவா ” என்று கேட்டுவிட்டு
கோரஸாகக் சிரிக்கிறார்கள்.
இனி இவர்கள் பள்ளம் தோண்டுவதற்கு இடமும்
இல்லை ..வாழுவதற்கு வழியும் இல்லை
கண்கெட்ட பிறகெதற்கு சூரியநமஸ்காரம்
இப்போது எல்லாம் முடிந்தாயிற்று. சற்று
உயரமான இடத்திலிருந்து கொண்டே அந்த
கிராமத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.





மனதுபடபடத்துக்கொண்டேயிருந்தது.
இதற்கு யாரைத்தான்குற்றம்
சொல்லுவது..?
கிராமத்து வளங்களையெல்லாம்
சுரண்டியெடுத்து உலகின் முகட்டில் வாழ்வு
நடத்தும் உல்லாச மனிதர்களை குற்றம்
சொல்வதா..?
இல்லை என்றும் மாறாமல்
இருந்துகொண்டேயிருக்கும் இந்த உலகின்
ஏற்றத்தாழ்வுகளை குறை சொல்வதா ?
அல்லது தங்களின் அறியாமையாலேயே
அழிந்து போன அந்த கிராமத்து சனங்களை
தான் குறை சொல்வதா ??
யாரைக் தான் குற்றம் காண்பது ..?

கண்ணுக்கு முன்னே ஒரு கிராமம் அழிந்து
கிடக்கிறதே..! இதை தடுத்து நிறுத்த
முடியாமல் போன என் இயலாமையை
குற்றம் சொல்வதா..?
வெள்ள தண்ணீரிலே.. வீழ்ந்து கிடக்கும்
என் கறுப்பு நிழல் மீது கண்ணீர் துளி ..!

ஓ.. சல்லிக்காட்டுச் சனங்களே..! என்னை
மன்னித்து விடுங்கள் ..!
உங்களுக்காக கண்ணீர் விடும்
கையாலாகாத்தனத்தை விட என்னிடம்
ஏதுமில்லை
என்னை மன்னித்து விடுங்கள்!!!








**இரா. ஜெகதீஸ்**
**(எழுதப்பட்ட ஆண்டு 1998 )**

# சல்லிக்காடு

குறு இதிகாசம்




இரா. ஜெகதீஸ்
(எழுதப்பட்ட ஆண்டு 1998 )